| | | | |
|---|---|---|---|
| **Headline** | Proper English for workers | | |
| **Date** | 26 April 2004 | | |
| **Media Title** | Tamil Murasu | **Section** | Singapore |
| **Page No** | 2 | **Size** | 4colx9.5cm |

# ஊழியர்களுக்கு முறையான ஆங்கிலப் பயிற்சி

"நல்ல ஆங்கிலம் பேசுக" இயக்கம் இந்த ஆண்டு சேவைத்துறையில் உள்ளவர்களை இலக்காகக்கொண்டு செயல்படுத்தப்படவிருக்கிறது.

சிங்கப்பூரின் தொழிலாளர்களில் 70 விழுக்காட்டினர் சேவைத் துறையில் இருப்பவர்கள். இவர்களை முறையான ஆங்கிலத்தைப் பேச ஊக்குவிப்பது இந்த ஆண்டு இயக்கத்தின் நோக்கம்.

இந்த ஆண்டின் "நல்ல ஆங்கிலம் பேசுக" இயக்கத்தை இடைக்கால மனிதவள அமைச்சர் திரு இங் எங் ஹென் இந்த வாரம் தொடங்கி வைத்தார்.

நல்ல ஆங்கிலம் பேசுவதை ஊக்குவிக்க, பார்வையாளர்களை ஈடுபடுத்தும் நாடகங்கள், கதை நேரம் போன்ற நடவடிக்கைகள் இந்த ஆண்டு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

"இந்த இயக்கம் மூலம் முறையான ஆங்கிலம் பேசுவது முன்னேற்றத்துக்கு உதவும். வேலைகளைத் தக்கவைத்துக் கொள்ள உதவும் என்பதை சிங்கப்பூரர்களுக்கு நினைவுபடுத்த விழைகிறோம்" என்றார் நல்ல ஆங்கிலம் பேசுக இயக்கத்தின் தலைவர் திரு டேவிட் வோங்.

"முக்கியமாக சேவைத் துறையில் பணிபுரிபவர்கள் முறையான ஆங்கிலம் பேசுவது முக்கியம். வாடிக்கையாளருடன் நல்ல உறவை ஏற்படுத்திக்கொள்ள சிறந்த பேச்சும் கனிவும் உதவும்" என்றார் அவர்.

"வேலை செய்பவர்கள், பிரபலமானவர்கள், பெற்றோர்கள், ஆசிரியர்கள் போன்றவர்களை சிறந்த ஆங்கிலம் பேசத் தூண்டுவது இந்த ஆண்டு இயக்கத்தின் நோக்கம்.

அவர்கள் மூலம் அவர்களைச் சுற்றி உள்ளவர்களையும் நல்ல ஆங்கிலம் பேசப் பழக்க முடியும்" என்றார் திரு டேவிட் வோங்.

நல்ல ஆங்கிலம் பேசுக இயக்கம் ஐந்தாவது ஆண்டாக சிங்கப்பூரில் நடத்தப்படுகிறது.

அமைப்புகள், முக்கிய நிறுவனங்களில் பணிபுரிபவர்களுக்கு நல்ல ஆங்கிலத்தில் பயிற்சிகளை அளிக்கும் பயிற்சிப் பட்டறைகளையும் இந்த இயக்கம் அந்தந்த அமைப்புகளுடன் இணைந்து நடத்துகிறது.

இந்த ஆண்டு "ஊழியர்களுக்கான நடைமுறைக் கல்வி" என்னும் திட்டத்தை இந்த இயக்கம் அறிமுகப் படுத்துகிறது. ஊழியர் மேம்பாட்டு நிறுவனத்துடன் இணைந்து இந்தத் திட்டத்தை இயக்கம் செயல்படுத்தவுள்ளது.